# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட் சகோதரிகள்**

லூர்து மேரி, நேசபாய்- சென்னை, எதெல்பெர்கா, ஆன்றோல், வில்சன் மேரி, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி, டோன்போஸ்கோ மேரி, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஜெரின் மேரி, ஸ்டெல்லா ரோஸ் -திண்டுக்கல், அனன்சியா மேரி, அருள் மேரி, டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, லூக்காஸ் மேரி, டோனெட்டல்லா அனஸ்த்தாசியாள், பவுலின் மேரி, பிலோமினாள், ஆக்னஸ் - கும்பகோணம், மேரி மௌரிஸ்- தஞ்சாவூர், லாசரிற்றா மேரி - தூத்துக்குடி, பிரேமா - திருநெல்வேலி, ஜான்சி மேரி- மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, புஷ்பா மேரி - சிவகங்கை, சலேத்மேரி, சவரியம்மாள், செராபின் டெய்சி - திருப்பூர், ரூபி மேரி - கரூர், ஜெயசேகரி - கொடைக்கானல், சகாயம் -கடலூர்.

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, சந்தனம், லீமா தெரஸ், பாத்திமா, ஞானசேகரன், நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; லீலாவதி, அமல செல்வி,- இருதய விஜிலா,மார்கிரேட் பெல்சியா, திண்டுக்கல்; மிக்கேல்சாமி - கோயம்பத்தூர். வியாகுல மேரி, பிரேமா மோரிஸ், - சென்னை, மேரி - இளையரசனேந்தல், சற்பி- அரியலூர்.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. ரூபி மேரி - கரூர்
அருட்சகோதரி. லூர்து மேரி- சென்னை
அருட்சகோதரி. மேரி மௌரிஸ் - தஞ்சாவூர்
அருட்சகோதரி. ஜோஸ்பிட்டா மேரி - திருச்சி
திரு. சந்தனம் - திருச்சி
திருமதி. ரூபியா - மங்கலக்குன்று

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**







# கடவுளின் தாய்

## பதிப்பாசிரியர் பக்கம்

ந.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். இந்த புதிய ஆண்டானது உங்கள் வாழ்க்கையில் எல்லா இன்பங்களையும் வாரி வழங்கும் ஆண்டாகவும், உங்கள் அனைவரின் கனவுகளையும் நிறைவேற்றும் ஆண்டாகவும் அமையட்டும்.


இந்த புத்தாண்டோடு சேர்த்து நாம் அன்னை மரியாள் இறைவனின் தாய் என்ற பெருவிழாவினையும் கொண்டாடுகின்றோம். இந்தப் பெருவிழாவானது பல கேள்விகளை நம்மிடம் எழுப்புகின்றது. ஒரு சாதாரணப் பெண்மணி எவ்வாறு உலகைப் படைத்த கடவுளின் தாயாக மாறமுடியும்? அன்னை மரியாள் ஒரு படைப்புப் பொருள் அப்படிப்பட்டவர் எவ்வாறு படைத்தவரின் தாயாக மாற முடியும்? இந்த கேள்விகள் அனைத்திற்கும் பதில், நிச்சயமாக அன்னை மரியாள் இறைவனின் தாயாக மாறமுடியும். காரணம் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை.

ஒரு கவிஞர் இவ்வாறு கூறுவார்

**அம்மா என்ற வார்த்தையில்
கடவுளுக்குப் பொறாமை**



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
பெண்களுக்குள் ஆசி பெற்றவர் மரியா - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
புத்தாண்டிற்கு விண்ணப்பம் - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினரின் பார்வையில் மரியா - 28
புலர்ந்து வரும் புத்தாண்டு - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

கடவுள் தான் படைத்த படைப்புகளாகிய மனித இனத்தைப் பார்க்கின்றார். இந்த மனித இனமானது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. காரணம், இந்த மனித இனமானது அம்மா என்ற உறவினைக் கொண்டிருக்கின்றது. அம்மா என்கின்ற உறவானது தன் பிள்ளைகளை மிகவும் அன்பு செய்கின்றது, பிள்ளைகள் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்போது இரவெல்லாம் கண்விழித்து அவர்களைக் கவனித்துக் கொள்கிறது. தனக்கு உண்பதற்கு உணவு இருக்கின்றதோ இல்லையோ தன் பிள்ளைகளை பசி போக்குகின்றது. விழா நாட்களில் தனக்கு உடுத்துவதற்கு உடை இருக்கின்றதோ இல்லையோ தன் பிள்ளைகளுக்கு புத்தம்புதிய ஆடைகளை உடுத்துகின்றது. கடினமான காலகட்டங்களில் தன் பிள்ளைகளின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாக இருக்கின்றது. இவை அத்தனையையும் கடவுள் பார்க்கின்றார். பார்த்த கடவுள் ஏங்குகின்றார், எனக்கு இதுபோல் ஒரு தாய் இல்லையே. முடிவு செய்கின்றார் எனக்கும் ஒரு தாய் வேண்டும். அன்னை மரியாளைத் தன் தாயாகத் தேர்ந்தெடுக்கின்றார்.

இந்த விழாவின் சிறப்பு என்னவென்றால் மகன் தன் தாயைத் தேர்ந்தெடுப்பது. மகனாகிய கடவுள் தன் தாயாக மரியாளைத் தேர்ந்தெடுக்கின்றார். பொதுவாக எந்த தாயும் எனக்கு இப்படிப்பட்ட குழந்தைதான் வேண்டும் என்று குழந்தையைத் தேர்ந்தெடுப்பது கிடையாது. அதுபோல் எந்த குழந்தையும் எனக்கு இப்படிப்பட்ட தாய்தான் வேண்டும் என்று தன்னுடைய தாயினைத் தேர்ந்தெடுப்பது கிடையாது. தத்தெடுக்கப்படும் குழந்தைகளுக்கு, தாய்மார்களுக்கு இது பொருந்தாது. கடவுள் தன் தாயைத் தேர்ந்தெடுத்தார் என்பதைவிட உருவாக்கினார் என்பதுதான் சரியானதாக இருக்க முடியும்.

கடவுள் உலகைப் படைக்கும்போது தான் படைத்த அனைத்தும் நல்லதெனக் கண்டார். மனிதரைப் படைக்கும்போது மிகவும் நல்லதெனக் கண்டார். அதுபோல் தன் தாயாகிய அன்னை மரியாளைப் படைக்கும்போது நிச்சயமாக நல்லதெனக் கண்டிருப்பார். இயேசுவின் வருகைக்காக பாதையினை செம்மைப்படுத்திய கடவுள் தன் தாய் அன்னை மரியாளின் வருகைக்காகவும் பாதையினை செம்மைப்படுத்துகின்றார். எவ்வாறு செம்மைப்படுத்துகின்றார் என்றால் அன்னை மரியாள் பிறக்கும்போதே ஜென்மப்பாவமில்லாமல் பிறக்க வைக்கின்றார். உலகிலுள்ள மனித இனமே ஜென்மப் பாவமான ஆதிப் பெற்றோரின் பாவத்தில் விழுந்து கிடக்கும்போது அன்னை மரியாளுக்கு அந்தப் பாவத்திலிருந்து கடவுள் விலக்கு அளிக்கின்றார். அதோடு நில்லாமல் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த போதிலும் அன்னை மரியாள் கன்னிமையை இழக்காமல் பார்த்துக் கொள்கின்றார். அன்னை மரியாள் இயேசுவைப் பெற்றெடுப்பதற்கு முன்னும் கன்னி, பெற்றெடுக்கும்போதும் கன்னி மற்றும் பெற்றெடுத்த பின்னும் கன்னி. இவ்வளவு சிறப்புக்களைப் பெற்ற அன்னை மரியாள் கடவுளின் தாயாக இருப்பதில் எந்தவொரு வியப்புமில்லை.

**கடவுளே பலநேரம் தாயாக இருக்கலாம்**

**சிலநேரம் கடவுளுக்கே தாய் தேவைப்படுகிறார்.**





சென்றுள்ளோம் என்றும் போன் வந்தது. நான் மாதாவிடம் மனமுருகி வேண்டினேன். ஜீவனைக் கொடுத்த ஜீவமாதாவிற்கு நன்றிகள் பல. என் அண்ணன் மகளுக்கு திருமணத்தடை இருந்தது. நான் ஜீவமாதாவிடம் விண்ணப்பித்தேன். நல்ல வரன் கொடுத்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**நவீன் - சாஸ்திரிகைர்**

என் மகனுக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தது, வலிப்பு வந்து விட்டது. நான் பயந்து மாதாவிடம் மன்றாடினேன். குழந்தைக்கு நற்சுகம் கிடைத்தது. நன்றிகள் அம்மா. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

என் நண்பர் ஒருவருக்கு மகளின் தேர்வு எழுத பணம் கட்ட வேண்டும் என்று வருந்தினார்கள். Postpaid செய்து தேர்வு எழுதினான் ஜீவமாதாவிடம் விண்ணப்பித்தேன், தேர்வில் எனக்கு இருந்த எல்லா பிரச்சனைகளையும் சுமூகமாக முடித்துக் கொடுத்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

### குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

டிசம்பர் மாதம் 2 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**யாகப்பர் மரிய அந்தோணி**

எனக்கு 2009-ல் திருமணம் நடந்தது. மழலை வரம் வேண்டி ஜீவமாதாவிடம் ஜெபித்தேன். அதேபோல் குழந்தை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

எனக்கு திருமணம் முடிந்து 4 வருடங்கள் ஆகிறது. குழந்தை நிற்கும் பின்னர் கருச்சிதைவு ஏற்படும். மனமுடைந்து மாதாவிடம் மன்றாடினேன். அன்னை மழலை வரம் தந்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கிறிஸ்து ராஜ்**

எனக்கு திருமண வரம் வேண்டி ஜீவமாதாவிடம் விண்ணப்பித்தேன். மாதாவின் அருளால் திருமணம் நல்ல முறையில் நடந்தது. அதேபோல் மழலை வரமும் கிடைத்தது. நன்றிகள் பல. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**எமிம்மா – காரப்பாக்கம்**

என் கணவருடைய அண்ணன் மகனுக்கு திருமணம் முடிந்து குழந்தைப்பேறு இல்லாமல் இருந்தது. மாதாவிடம் விண்ணப்பித்தேன். மழலை வரம் தந்த அன்னைக்கு நன்றிகள். மேலும் எனக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தது. மாதாவின் அருளால் நற்சுகம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜான்சன் ஜேம்ஸ்**

ஒரு மாலை நேரம் திருப்பலியில் இருந்தேன். அப்பொழுது என் மகனுக்கு உடல்நிலை சரியில்லை என்றும், மருத்துவமனைக்கு கொண்டு





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**துயர் துடைக்கும் அன்னை மரியா**

ஓர் ஊரில் ஒருவர் காட்டிற்குச் சென்று தவம்புரிந்து ஞானம்பெற விரும்பினார். எனவே, அருகில் இருந்த காட்டிற்கு சென்று தவம்புரிய விரும்பினார். இவர் கடுமையான பசியினால் வாடினார், அப்போது எவராவது காட்டிற்கு வந்து உதவி செய்ய மாட்டார்களா? என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். சற்று நேரத்தில் இரண்டு கால்களையும் இழந்த குள்ளநரி ஒன்று ஊர்ந்து வந்தது. திடீரென்று ஒரு புதரிலிருந்து சிங்கம் ஒன்று வெளியே வந்தது. சிங்கத்தைப் பார்த்து அந்த மனிதர் ஓடி ஒளிந்து கொண்டார். அந்த சிங்கம் குள்ளநரியை நோக்கி வந்தது. அவர் பாவம் குள்ளநரிக்கு கால்கள் இருந்திருந்தால் தப்பித்து ஓடியிருக்கும் என்று எண்ணினார். சிங்கம் குள்ளநரியின் மிக அருகில் வந்தது. சிங்கத்தின் வாயில் மாமிசம் இருந்தது. தன் வாயில் இருந்த மாமிசத்தை குள்ளநரிக்கு உணவாக கொடுத்துவிட்டு காட்டிற்குள் சென்றது சிங்கம். இதைப் பார்த்துக் கொண்டிருந்த நபர் தன் மனதில் சொல்லிக் கொண்டார். ஐயோ இவ்வளவு நாளும் ஊனமான குள்ளநரியோடு தன்னை ஒப்பிட்டு பிறரின் உதவியை எதிர்பார்த்து இருந்தேன், ஆனால் இரக்கத்தோடு உதவிய சிங்கத்தைப் போன்று பிறரின் துயரத்தில் துணை நிற்க கடவுள் எனக்கு ஒரு செய்தியை கொடுத்திருக்கிறார் என்று கூறி கடவுளுக்கு நன்றி கூறினார். "நெருக்கடியான வேளையில் நான் ஆண்டவரை நோக்கி மன்றாடினேன், ஆண்டவரும் எனக்கு செவிகொடுத்து என்னை விடுவித்தார்"(தி.பா 118:5)

துன்புறுவோரின் துயரங்களைத் துடைப்பதில் அன்னை மரியாள் நம் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்கிறாள். மரியாள் கருவுற்றிருந்தபோதும் காடு மலைகள் கடந்து 90 கி.மீ நடந்து சென்று எலிசபெத்திற்கு உதவி செய்தார். கானாவூர் திருமணத்தில் திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது என்று தன் மகனிடம் கோரிக்கை வைத்தார்(யோ2:3) நம்முடைய தேவைகள் அனைத்தையும் அறிந்தவராக அன்னை மரியாள் இருக்கின்றார். நம்முடைய துன்பங்களை தன்னுடைய துன்பமாக கருதுகின்றார். டிசம்பர் மாதத்தில் சென்னை, நெல்லை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. தங்களுடைய வீடுகளையும், கால்நடைகளையும், வாழ்வாதாரத்தையும் இழந்து மிகுந்த துன்பத்தில் இருப்பவர்கள் பலர். இவர்கள் அனைவரோடும் அன்னை துணை நிற்கிறார். கானாவூர் திருமணத்தில் இயேசுவிடம் அன்னை கோரிக்கை வைத்ததுபோல் நம்மிடம் அன்னை முன்வைக்கும் கோரிக்கை மழை வெள்ளத்தின் பாதிப்பு அதிகம் உங்களால் முடிந்ததை செய்யுங்கள். அன்னையோடு இணைந்து பாதிக்கப்பட்ட மக்களின் துயரத்தில் துணைநிற்போம் புதிய தமிழகம் உருவாக்குவோம்.

# பெண்களுக்குள் ஆசி பெற்றவர் மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

## தொடக்கவுரை

இறையருளால் மீண்டும் நமக்கு ஒரு புதிய ஆண்டு கொடையாகக் கொடுக்கப்படுகிறது. நன்றி கூறுவோம். அன்புநிறைக் கரங்களினால் இவ்வாண்டை வரவேற்போம். உலகின் போர்ச்சூழலும், இயற்கை பேரிடர்கள் ஏற்படுத்தும் பேரழிவுகளும், அச்சத்திலும் துன்பத்திலும் நம்மை ஆழ்த்தினாலும், நம்பிக்கையோடு 2024 ஆம் ஆண்டை மகிழ்வுடன் எதிர்நோக்குவோம். ஆண்டின் முதல் நாளிலேயே, மரியா, இறைவனின் தாய் என்ற பெருவிழாவைத் திருஅவை சிறப்பித்து, மக்கள் அனைவரையும் அவரின் தாயன்பின் அரவணைப்பில் ஒப்படைக்கின்றது. இறைவனின் அருள் வரங்கள் அனைத்தின் உறைவிடமாகவும், பெண்களுக்குள் ஆசி பெற்றவராகவும் விளங்கும் மரியாவைப் புத்தாண்டின் விடியலில் போற்றுவது மிகவும் பொருத்தமானது அவர் தம் மக்களுக்குப் பெருமையானது. பெண்களுள் பேறுபெற்றவர் நீரே என்று நாம் அன்னை மரியாவை நாளின் பல நேரங்களில் போற்றுகின்றோம். அவரும் நம்மை பேறுபெற்றவர் கூட்டத்தில் இணைக்க விரும்புகின்றார். எனவேதான் ‘அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்’’ என்ற வேண்டுகோளை விடுத்துக் கொண்டு இருக்கின்றார். அன்னை மரியாவைப் போன்று அருள் வாழ்வில் நிலைத்திருந்து, இறைவனின் பார்வையில் மதிப்புக்குரியவர்களாக இருக்க, இக்கட்டுரை தரும் சிந்தனைகளை நமதாக்குவோம்.

## எலிசபெத்தின் வாழ்த்து

வார்த்தை மனுவாகி நம்மிடையே குடிகொள்ளும் மகிழ்வுச் செய்தியோடு, திருமுழுக்கு யோவானின் பிறப்புச் செய்தியும் மரியாவுக்குத் தரப்படுகிறது. முதிர்ந்த வயதில் கருவுற்றிருக்கும் தனது உறவினரான எலிசபெத்தை சந்திக்க விரைகின்றார். யூதேய மலைநாட்டிலுள்ள எய்ன் கரீம் நகரை அடைகின்றார். சென்றவிடமெல்லாம் ஆசீர் பெற்றது புத்துயிர் அடைந்தது ஏனெனில் மரியா மட்டுமல்ல, அவரின் திருவயிற்றில் உருவான இம்மானுவேலும் பயணம் மேற்கொண்டார், புதிய உடன்படிக்கைப் பேழை கலிலேயாவிலிருந்து யூதேயா மலைநாட்டிற்குக் கடந்து சென்றது. இறைவனின் தாய் செக்கரியாவின் வீட்டை அடைந்ததும், இயேசுவின் முன்னோடியான திருமுழுக்கு யோவானின் அன்னை எலிசபெத்தை வாழ்த்தினார். வயது முதிர்ந்தவர், குழந்தை பெற இயலாதவர் என்று கருதப்பட்ட எலிசபெத்துக்கு, இறைப்பார்வையில் கருணை கிடைத்திருப்பதை எண்ணி வாழ்த்துகிறார். வாழ்த்தைக் கேட்டதும் விவரிக்க முடியாத இறை-மனித பரிமாற்றங்கள் நிகழ்கின்றன. எலிசபெத்தின் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. தூய ஆவியாரால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்ட அவர் ‘பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே’’ (லூக் 1:42) என்று குரலெடுத்துக் கூறினார்.

இறைவனின் படைப்புப் பணியில் பங்குபெறும் பெண்கள் அனைவரும் பேறுபெற்றவர்களே. அவர்கள் அனைவரிலும் மரியா இறைவனின் ஆசீரை முழுமையாகப் பெற்றவர். மரியா, ஆண்டவரின் தாய் என்று முதன் முதலில் எலிசபெத்து இனம்கண்டு கொள்கின்றார். மேலும் இறைவார்த்தையை மரியா





8-ம் பக்க தொடர்ச்சி................

என்று பணிகின்றார். அந்தப் பணிவினால் எவ்வளவோ துன்பங்களை சுமக்க வேண்டியிருந்தது. ஆயினும், இறுதிவரை இறைவன் மீது அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். நமது நம்பிக்கை வாழ்வு உறுதியாக இருக்கிறதா? வாழ்வின் எல்லாச் சூழலிலும் இறைவனின் அருட்கரம் நம்மைத் தொடர்கிறது என்ற நம்பிக்கையில் வளர ஆசி பெற்ற மரியா நம்மை அழைக்கின்றார்.

மீட்பின் திட்டத்தில் தனக்குரிய பங்கை மிகச் சிறப்பாக நிறைவேற்றியவர் மரியா. அவர் இறைவனால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டார். நமக்கென்று இறைவன் ஒரு திட்டத்தை வகுத்துள்ளார், அதைக் கண்டு கொள்வோம். அதை நிறைவேற்றி இறைவனுக்கு பெருமையும் மகிமையும் சேர்ப்போம். நாமும் இவ்வுலகில் அமைதியுடனும், மகிழ்வுடனும் வாழ்வோம். எனவே தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதே எனது உணவும் பானமும் என்று போதித்த இயேசுவைப் பின்பற்றுவோம். இறை ஆசீரை அபரிவிதமாகப் பெறுவோம்.

இறைவனுக்குத் தாயாகும் பேறு பெற்றதால் மரியா, பெண்களுக்குள் ஆசி பெற்றவர் என அழைக்கப்பட்டார். நாமும் ஒவ்வொரு நாளும் அதே இறைவனை நற்கருணைக் கொண்டாட்டத்தில் உட்கொள்கிறோம். இதை பெரும் பேறாக நாம் நினைப்பது இல்லை. இயேசுவின் உடலோடு ஒன்றாகிறோம். இந்த அனுபவம் ஒவ்வொரு நாளும் நமக்குக் கிடைக்கிறது. நாமும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே.

மரியா இயேசுவின் தாய் மட்டுமல்ல் நம் அனைவரின் தாய். அவர் தம் மகன், நம்மீது கொண்ட அன்பினால் சிலுவையடியில் அவரது அன்னைக்கும் நாம் மக்களானோம். நமது அன்னை, இறைவனின் அன்பு மகளாக, இயேசுவின் ஒப்பற்ற தாயாக, தூய ஆவியாரின் பத்தினியாக வாழ்ந்து, மூவொரு இறைவனின் உறைவிடமாக விளங்கினார். நாமும் நமது அன்னையின் பண்புகள், புண்ணியங்கள், விழுமியங்களைக் கடைபிடிப்போம். அவர் நமக்காக இறை அருளைப் பெற்றுத் தந்து கொண்டே இருக்கின்றார். அன்னைக்கு உகந்த மக்களாக வாழ்வோம்.

## நிறைவுரை

மரியாவை பெண்களுள் பேறுபெற்றவராக போற்றும் நாம், நமது சமுதாயத்தில் உள்ள பெண்களைப் பற்றி சிந்தித்துப் பார்ப்போம். தாய்மை, பெண்மை, மென்மைப் பண்புகளால், பெண்கள் இறைவனால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் இறைமைப் பண்புகள். மனித உயிர்களைப் பெற்று பேணிக் காக்கும் சிறந்த பொறுப்பினை இவர்கள் பொறுப்பில் விட்டிருக்கிறார். இவர்களை நாம் எவ்வாறு போற்றுகிறோம். நாளுக்கு நாள் இவர்களின் நிலைமை மோசமாகி கொண்டே போகின்றது. சிறுமியரும், இளம்பெண்களும் வீடுகளிலும், சமுதாயத்திலும் அச்சத்தில் வாழ வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. இவர்கள் என்று மரியாவின் விடுதலைக் கீதத்தை முழங்க இருக்கின்றார்கள்? மரியாவை வானளாவப் போற்றும் மக்கள், பெண் சமுதாயத்தையும் போற்ற, ஆசீர்வதிக்க, பெருமைப்படுத்த அவர் கேட்டுக்கொள்கிறார். இயேசுவின் பெண்ணியப் பார்வையை நமதாக்குவோம். பெண்கள் அடிமைகளாக இருக்கும் வரை ஆண்களும் அடிமைகளே. பிறரை மதிக்காதவர், போற்றாதவர் இன்னும் விடுதலை பெறவில்லை. எனவே ஆண்-பெண் சமத்துவ சமுதாயம் படைக்க விரும்புவோர், பெண்களை உயர்வாக மதிக்கக் கற்றுக் கொள்வோம். அப்போதுதான் அன்னை மரியாவை பெண்களுள் பேறுபெற்றவர் என்று அழைக்க உரிமை பெறுகிறோம்.

# புலர்ந்து வரும் புத்தாண்டு

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

புலரும் புதியநல் பொலிவுறு ஆண்டில்
புதியன யாவும் மலரட்டும்
அகிலம் முழுமையும் அமைதியில் திளைத்திட
ஆண்டவன் நிறையருள் பெருகட்டும்

இறைவனை மறுப்போர் மறப்போர் எல்லாம்
மெய்யொளி கண்டே ஒளிரட்டும்
அவனியில் உள்ளோர் அனைவரி னுள்ளே
ஆன்மீக அருளொளி மிளிரட்டும்

கயமை எனும்பெரும் காரிருள் நீங்கி
மனிதமும் நேயமும் விடியட்டும்
ஒருதாய் மக்கள் நாம்எனச் சொல்லும்
ஒருமைப்பாடுயர்ந் தோங்கட்டும்

மனிதரை மாய்க்கும் வன்முறைக் கொடுமைகள்
என்றுமே இல்லா தொழியட்டும்
அன்பும் அறனும் நீதியும் நேர்மையும்
நின்றே உலகினை ஆளட்டும்

நீர்வளம் நிலவளம் பொருள்வளம் சிறந்து
நானிலம் எங்கும் செழிக்கட்டும்
சுயநலம் இல்லாப் பிறர்நலம் பேணும்
பேற்றினை உடையோர் வாழட்டும்

காலத்தைக் கணித்திடும் ஆண்டுகள் யாவும்
நிகழ்வுகள் காட்டிடும் பதிவுகளே
வரும்புது ஆண்டே நலன்பல பொழிவாய்
நிலையாய் உந்தன் பெயரினைப் பதிப்பாய்





முற்றிலும் நம்பினதால் பேறுபெற்றவர் என்று உளமாறப் போற்றுகிறார். உடனே மரியாவும் மீட்பரின் தாயாகும் பேற்றினை இறைவனின் மாபெரும் கொடையாக எண்ணியவராய், பிறக்கவிருக்கும் மெசியா ஆற்றவிருக்கும் புரட்சிகரமான செயல்களை உள்ளடக்கிய விடுதலை கீதத்தை முழங்கினார். அப்பாடலிலும், தான் இறைவனுக்குப் பணிந்து தாழ்ச்சியான மனநிலையில் வாழ்ந்த வாழ்வுக்கான பரிசாகத்தான் இந்நிகழ்வைப் பார்க்கிறார். எனவேதான் 'இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்'' என்று பெருமிதம் கொள்கிறார்.

**பெண்களுள் ஆசி பெற்றவர்**

உலகம் உருவாகும் முன்பே, ஆதி பிதா சிந்தனையில் உருவாகி கருவானவர் மரியா. ஆதவனாம் இயேசுவை உலகிற்கு அளிக்க இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பற்ற ஒரு பெண். இறைவாக்கினர்களால் முன்னறிவிக்கப்பட்ட கன்னியும் தாயுமானவர். பிறப்புநிலை பாவமின்றி தோன்றியவர். ஆண்டவரின் அருள் வரங்களால் நிரம்பப்பெற்று அணி செய்யப்பட்டவர். பாவத்தின் நிழல் அவரை அணுகா வண்ணம் இறைவன் அவரைப் பாதுகாத்து வந்தார். மெசியாவின் தாயாகும் பேற்றினை வானதூதரால் அறிவிக்கப்பட்டவர். தூய ஆவியாரின் வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டவர். இத்தகைய மரியா எலிசபெத்தின் வீட்டிற்குச் சென்றார். இறைவனையே தனது உதரத்தில் சுமந்த திருக்கோவிலாக அங்கு சென்று, அவ்வில்லத்தையும் இறைப்பிரசன்னத்தில் மூழ்கச் செய்தார். புதிய உடன்படிக்கையின் பேழை அவ்வீட்டில் மூன்று மாதம் தங்கி வாசம் செய்தது. யூதப்பெண்கள் அனைவரும் மெசியா தங்களிடம் பிறக்க தவமிருந்து இறைவேண்டல் புரிந்து வந்தனர். ஆனால் மெசியாவின் தாயாகும் பேற்றினை மரியா பெற்றார். 'எம்மான் இயேசு உனை அம்மா என்றழைக்க என்ன தவம் செய்தாயோ'' என்றுதான் அன்னையைப் புகழத் தோன்றுகிறது. இத்தகைய பேறுபெற்ற மரியா, எருசலேமின் மாட்சியாக, இஸ்ரயேலின் மகிழ்ச்சியாக, பெண் குலத்தின் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றவராக விளங்கினார். ஆனால் இறைவன் முன், தன்னை அடிமையாகத் தாழ்த்திக் கொண்டார். இறைவார்த்தையை முழுமையாக நம்பினார். மூன்று மாத காலமும் ஆண்டவரின் அன்னை, தேவையிலிருந்த தன் உறவினருக்குப் பணிவிடை செய்தார். எனவே இறைவனிடமிருந்து அருளுக்கு மேல் அருள் வரங்களைப் பெற்றவராய்த் திகழ்ந்தார். இத்தகைய பேறுபெற்ற மரியாவைப் போன்று திருவிவிலியத்திலும் ஒரு சில பெண்கள் ஆசீர் பெற்றவராகக் கருதப்படுகின்றனர். அவர்களைப் பற்றிய குறிப்புக்களைக் காண்போம்.

**திருவிவிலியத்தில் பேறுபெற்ற பெயர்கள்**

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பேறுபெற்ற பெண்கள் ஒரு சிலர் காணப்படுகின்றனர். நீதித் தலைவர்கள் நூலில் இடம்பெறும் இறைவாக்கினரும் நீதித்தலைவருமான தெபோரா காலத்தில், கானானிய படைத்தலைவன் சீசராவை, எபேரின் மனைவி யாவேல், கூடார முளை மற்றும் சுத்தியல் கொண்டு நெற்றிப்பொட்டில் அடித்துக் கொலை செய்தார். இந்த துணிச்சலான செயலைக் கண்டு தெபோராவும், பாராக்கும் பாடிய பாடலில் பின்வரும் பகுதி இடம் பெறுகிறது. 'கேனியனான எபேரின் மனைவி யாவேல், நீ பெண்களுள் பேறு பெற்றவள், கூடாரம் வாழ் பெண்களுள் நீ பேறு பெற்றவள்,'' (நீதி 5:24). ஒலோபெரின் தலையை யூதித்து கொய்த பின் மக்கள் யாவரும் மலைத்துப் போய் 'எங்கள் கடவுளே, நீர் போற்றி'' என்று இறைவனைப் புகழ்ந்தனர். ஊசியா, யூதித்திடம் 'மகளே, உலகில் உள்ள எல்லாப் பெண்களையும்விட நீ உன்னத கடவுளின் ஆசி பெற்றவள்'' (யூதி 13:18) என்றும், 'இறவாப் புகழ் பெறக் கடவுள் உனக்கு அருள்வாராக'' (யூதி 13:20) என்றும் கூறினார். நற்செய்தியில் இயேசு, 'பெண்களுள் பிறந்தவருள் திருமுழுக்கு யோவானை விடப் பெரியவர் எவருமிலர்'' (மத்

11:11) என்று மொழியும் போது எலிசபெத்தும் பெண்களுள் பேறுபெற்றவராகக் கருதப்படுகிறார். பழைய ஏற்பாட்டில் இரு பெண்களும் எதிரிகளை வீழ்த்தியதால் தம் சொந்த இனத்தவரால் புகழப்படுகின்றனர். ஆனால், மரியா அனைவருக்கும் மீட்பையும் விடுதலையையும் கொண்டு வந்த மெசியாவின் தாய் என்ற பேறுபெற்றதற்காகப் புகழப்படுகிறார்.

**நாமும் பேறுபெற்றோர்**

நாம் திருமுழுக்கு பெறும்போது பிறப்புநிலை பாவத்திலிருந்து விடுதலை பெற்று, இறைமக்களுக்குரிய உரிமைப்பேற்றை அடைகிறோம். கிறிஸ்துவின் இறையாட்சியைப் பரப்பும் சீடர்களாகிறோம். திருஅவையின் உறுப்பினர்களாகி மீட்பின் பயன்கள் அனைத்தையும் அனுபவிக்கும் அருள் நிலையில் இருக்கிறோம். அருட்சாதனங்கள் வழியாக இறை அருள், ஆற்றல், மன்னிப்பு அனைத்தையும் பெறுகிறோம். அனைத்திற்கும் மேலாக தினமும் நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்கேற்று கிறிஸ்துவின் திருவுடலை உண்கிறோம். திரு இரத்தத்தைப் பருகுகிறோம். இறைவார்த்தை இறைத்திருவுளத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. எனவே இறைவார்த்தையில் வேரூன்றி இறைவனின் விருப்பப்படி நாம் வாழும் போது, அவரே நம்மைப் பார்த்து அவரின் அன்பான மகள், மகன் என்று பூரிப்படைகிறார். மலைப்பொழிவை உண்மையாகவும் உறுதியாகவும் கடைபிடிக்கும் போது நாம் பேறுபெற்றவர் ஆகின்றோம். ‘உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர் (லூக் 11:27) என்று கூட்டத்திலிருந்த ஒரு பெண் குரலெழுப்பிக் கூறிய போது இயேசுவே கூறுகின்றார், ‘இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர் (லூக் 11:28). எனவே இறைவார்த்தையின்படி நடப்பவர்களாய் இருப்போம். வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல் நாமும் நிறைவுள்ளவர்களாக இருப்போம். விண்ணகத் தந்தை தூயவராய் இருப்பது போல் நாமும் தூயவர்களாக இருப்போம். பேறுபெற்றோர் கூட்டத்தில் இணைவோம்.

**ஆசி பெற்ற மரியாவின் செய்தி**

எலிசபெத்து மரியாவை விட வயதில் மூத்தவர், அவர் சமுதாய, சமய அந்தஸ்தில் உயர்ந்தவராக இருந்த போதிலும், மரியாவை மனதார, உளமாறப் போற்றுகின்றார். பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் என்று கூறும்போது இஸ்ரயேல் குடும்பத்தின் முதல் பெண்ணாக நற்செய்தியாளர் லூக்காவால் படம்பிடித்துக் காட்டப்படுகிறார். மரியா மட்டுமல்ல் அவர் வயிற்றில் வளரும் குழந்தையும், அனைத்து குழந்தைகளையும் விட ஆசி பெற்றது என்பதையும் எலிசபெத்து இங்கு உணர்த்துகின்றார். நாமும் ஒருவருக்கொருவர் ஆசீராக இருப்போம். இறைவன் ஆபிரகாமை நோக்கிக் கூறிய வார்த்தைகளை நினைவு கூருவோம். ‘உன்னை நான் பெரிய இனமாக்குவேன் உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்” (தொ. நூல் 12: 2).

நாம் அனைவரும் இறைவனின் மக்கள். அவரின் சாயலில் படைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறோம். அவரை அப்பா, தந்தையே என்று அழைக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறோம். இறைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் நாம். நம்மீது அருள் வரங்களைப் பொழிந்து, நாம் பிறருக்கு ஆசீராக இருக்க விரும்புகிறார். எனவே இந்தப் புதிய ஆண்டில் நாம் பிறருடைய வாழ்வில் மகிழ்வை, அமைதியை, சமாதானத்தைக் கொண்டு வருபவர்களாக மாறுவோம்.

மரியாவிடம் சிறந்து விளங்கிய நம்பிக்கையை நாம் கண்டுபாவிப்போம். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு செய்தி அவருக்கு வழங்கப்படுகிறது. அதற்கு விளக்கம் தரப்படுகிறது. இறைவார்த்தையில் நம்பிக்கை கொண்டு ஆகட்டும்

தொடர்ச்சி 31-ம் பக்கம்.........





பெற்றெடுத்தார் என்பது ஒரு மறக்க முடியாத, மறுக்க முடியாத வரலாற்று உண்மை. கன்னி மரியிடம் இருந்து பிறந்த இயேசு ஒரு வரலாற்று மனிதர் என்பதும் யாரும் மறுக்க இயலாது. புனித கன்னி மரியாள் பரிசுத்த ஆவியினால் கருவுற்று இறை மகனை ஈன்றெடுத்தார். மத்தேயு 2 :11 - இல் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

மாற்கு 6 : 3-ல் இவன் தச்சரின் மகன் அல்லவா மரியாவின் மகன் தானே என எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். மேலும், லூக்கா நற்செய்தி 2 : 51- இல், பின்பு அவர் அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்குப் பணிந்து நடந்தார். அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார்

என்றும் யோவான் 19 : 26 - இல் இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், அம்மா, இவரே உம் மகன் என்றார்.

மேலும், யோவான் நற்செய்தி 2 : 5-இல் இயேசுவின் தாய் பணியாளரிடம், அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்றார். இவ்வாறாக விவிலியத்தில் கன்னி மரியாள் இறைவனின் தாய் என்பதற்கு பல சான்றுகள் சொல்லப்பட்டிருக்கின்றன ஆனாலும் எவ்வளவோ பெண்கள் இவ்வுலகத்தில் வாழ்ந்திருக்க, கன்னி மரியாவை மட்டும் இறைவன் ஏன் தேர்ந்தெடுத்தார்? அதற்கான காரணம் என்ன? ஏனென்றால், அவள் பிறப்பிலேயே ஜென்ம பாவம் இல்லாமல் பிறந்த அமல உற்பவி அவள் இளமை பருவத்தை கடவுளுக்காக அர்ப்பணித்து ஆலயத்தில் பணி செய்திருந்தவர்.

இறைவனையே கரு தாங்கும் அளவிற்கு தூய்மை நிறைந்த பெண்ணாக இருந்தவள். ஆகையால்தான் அவளை இறைவன் தான் இவ்வுலகில் மனு உருவாக தேர்ந்தெடுத்தார். இப்படிப்பட்ட சிறப்புகள் வாய்ந்த அன்னை மரியாவை நாம் இறைவனின் தாய் என்று மட்டும் அல்லாமல் நம் அனைவருக்கும் தாயாக ஏற்றுக் கொண்டு அவரைப் பணிந்து இறை இயேசுவிடம் நம் துன்ப நேரத்தில் நமது பாவங்களை மன்னித்து நமக்காக பரிந்து பேச மன்றாடுவோம்.



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா ⑪

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

அன்னை(கன்னி) மரியாள் இந்தப் பெயரை உச்சரிக்கும் போதே நமது உதடுகள் தித்திக்குதல்லவா? ஏன் இந்த பெயருக்கு மட்டும் இவ்வளவு சிறப்பு? இவ்வளவு பாக்கியம்? ஆம், அவள் கடவுளை ஈன்றெடுத்தவள். கடவுள் மனு உருவாக பெரிதும் துணை புரிந்தவள். உலகத்தில் உள்ள எல்லா பெண்களைவிடவும் பேறுபெற்றவள். இறைவனை ஈன்றெடுத்ததினால் இறைவனுக்கு மட்டும் தாய் அல்ல, உலகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் அவள் தாயாக விளங்குகின்றாள். இறைவனிடம் நமக்காக பரிந்து பேசுகிறாள்

திரு அவையின் மறை கோட்பாடுகள்படி மரியா கடவுளின் தாய் மற்றும் மரியா எப்பொழுதுமே கன்னி ஆகிய இரண்டும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாலும் நமது சகோதர சபையினராலும் எப்பொழுதுமே ஏற்றுக்கொள்ளப்பட்டவை எபேசு சங்கம் மரியாளை கடவுளின் தாய் என்கிறது. திருத்தந்தை ஆறாம் பால் அவரை திரு அவையின் தாய் என்று அழைத்தார் திரு அவையின் தொடக்க காலம் முதலே இறை நம்பிக்கையாளர்கள் ஆகிய நாம் அனைவரும் அவரை நமது தாய் என்றும் கடவுளின் தாய் என்றும் அழைத்து வருகிறோம் எபேசு சங்கம் கிபி 431 இல் மரியாவிற்கு வழங்கிய பட்டம்தான் மரியா கடவுளின் தாய் என்பது. இதே மறை கோட்பாட்டை கால்சிதோன் சங்கம் கிபி 454 - இல் மீண்டும் வலியுறுத்தியது. இருப்பினும், கிபி 534-ல் திருத்தந்தை கான்ஸ்டான்டி நோபிலின் ஆட்சி மன்றத்திற்கு தான் எழுதிய கடிதத்தில் மரியா கடவுளின் தாய் எனும் பட்டத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். மரியா கடவுளின் தாய் என்பதற்கு சில விவிலிய பகுதிகளை சான்றுகளாகக் கூறலாம். புதிய ஏற்பாட்டிலும் திரு அவையின் நம்பிக்கை அறிக்கையிலும் மரியா இயேசுவின் தாய் என்பது மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இருப்பினும், அதை ஏற்காத சிலர் தொடக்க கால திரு அவையில் இருந்தனர். கன்னி மரியா இயேசுவை





## அன்னையின் 6 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



### பாதுகாக்கும் அன்னை, மர்சைல்ஸ், பிரான்சு

பிரான்சு தேசத்தில் உள்ள கடற்கரை நகரமாகிய மர்சைல்ஸ் நகரத்தின் பாதுகாவலரான அன்னை மரியாவின் ஆலயம் பாதுகாக்கும் அன்னையின் ஆலயம் என்றழைக்கப்படுகிறது. இந்நகரில் வாழும் மக்கள் இந்த ஆலத்தில் வீற்றிருந்து தன்னுடைய பரிந்துரை செபத்தின் வழியாக தங்களையும், தங்கள் நகரத்தையும் பாதுகாக்கும் இந்த அன்னையை நல் அன்னை என்றழைக்கின்றனர். இத்திருத்தலம் ஆகஸ்டு மாதத்தில் கொண்டாடப்படும் அன்னையின் விண்ணேற்பு திருவிழா அன்று நடைபெறும் நகரின் திருயாத்திரை தலமாகவும் அமைந்திருப்பது கூடுதல் சிறப்பு. ஆகஸ்டு மாதம் என்பது கடுமையான கோடை வெயிலுடைய விடுமுறை மாதம் என்பதை நாம் நினைவில் கொள்ளுதல் நலம் பயக்கும்.

இத்திருத்தலமானது, மர்சைல்ஸ் நகரில் அமைந்துள்ள ஒரு குன்றின் மீது கட்டப்பட்டுள்ளது. இக்குன்றின் உயரம் 489 அடியாகும். இங்குதான், மத்திய காலத்திலிருந்து நகரின் பாதுகாப்பிற்காக ஒரு கோட்டை கட்டப்பட்டது. அதன் ஒரு பகுதியிலே ஒரு சிற்றாலயம் அமைந்திருந்தது.

கி.பி. 1214ஆம் ஆண்டு மர்சைல்ஸ் நகர குருவானா் அருட்பணி. பியர் என்பவரின் விருப்பப்படி, இக்கோட்டையின் மீது அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிற்றாலயமானது கட்டப்பட்டது. இச்சிற்றாலயம் செயின்ட் விக்டர் துறவு மடத்தின் எல்லைக்குள் அமைந்திருந்தது. துறவு மடத்தின் தலைவர் சிற்றாலயம் அமைக்க அனுமதி அளித்ததோடு, அச்சிற்றாலயத்தை சுற்றி திராட்சை மற்றும் பழத்தோட்டங்களை அமைக்க அனுமதியளித்தார். இச்சிற்றாலயமானது நான்கு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. கி.பி. 1218ஆம் ஆண்டு இத்துறவு மடத்தைச் சார்ந்த சொத்துக்களின் பட்டியலை திருத்தந்தை மூன்றாம் ஹொனோரியுஸ் வெளியிட்டபோது, அப்பட்டியலில் இந்த ஆலயத்தின் பெயரும் அடங்கியிருந்தது. கி.பி 1256ஆம் ஆண்டு அருட்பணி. பியர் அவர்களின் மறைவுக்குப்பின் இச்சிற்றாலயம் துறவு மடத்தின் ஒரு பகுதியாக மாறி, சுயமாக இயங்கும் நான்கு துறவிகளுடன் இச்சிற்றாலயம் பராமரிக்கப்படலானது.

ஆலயத்தின் தொடக்க காலத்திலிருந்தே விசுவாசிகள் இந்த ஆலயத்தில் வந்து பல்வேறு வேண்டுதல்களை செய்து வந்தனர். அதிலும் குறிப்பாக கப்பல் மாலுமிகள் தங்கள் பயணத்தை பாதுகாக்கும் படி



அன்னையிடம் வேண்டுதல் வைத்தனர். பயணம் பாதுகாப்பாக அமைந்து இல்லம் திரும்பியவுடன், ஆலயம் வந்து நன்றி பொருத்தனைகளைச் செலுத்தினர். கி.பி. 15ஆம் நூற்றாண்டில் இச்சிற்றாலயம் புதுப்பிக்கப்பட்டது.

இச்சிற்றாலயத்திற்கு பல்வேறு அரசர்களும், அரச குடும்பத்தினரும் வருகை புரிந்து தங்கள் வேண்டுதல்களையும், நன்றி காணிக்கைகளையும் செலுத்தினர். அதில் குறிப்பாக பிரெஞ்ச் அரசர் முதலாம் பிரான்சிஸின் தாயாரும், மனைவியும் கி.பி. 1516ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாம் தேதி, மரிஞான் பகுதியை வெற்றிக் கொண்டு வந்த அரசர் பிரான்சிஸை காண சென்றபோது அன்னையிடம் வேண்டுவதற்காக வந்தனர். பின், அரசருடன் திரும்பும் போது, அரசர் பிரான்சிஸ் தன் தாய் மற்றும் மனைவியுடன் ஜனவரி 7ஆம் தேதி அன்னையை தரிசிக்க இங்கு வந்தனர். அப்பகுதியிலே சில நாட்கள் தங்கிய பின், அங்கிருந்து புறப்படும் போது மீண்டும் ஜனவரி 22ஆம் தேதி ஆலயம் வந்து அன்னையை தரிசித்து தங்கள் நன்றியை வெளிப்படுத்தினர்.

ஆலயத்தை தரிசித்து விட்டு சென்ற அரசனின் மனத்திற்குள், ஆலயம் அமைந்திருக்கும் இடம் பாதுகாப்பில்லாமல் இருப்பதாகவும், அந்த இடம் எப்போது வேண்டுமானாலும் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படும் என்று உணர்ந்தார். எனவே, ஆலயத்திலிருந்து 1 மைல் தொலைவில் இருந்த தீவில் ஒரு கோட்டையை கட்ட உத்தரவிட்டார், மேலும் ஆலயம் அமைந்திக்கும் கோட்டையை பலப்படுத்த ஆணை பிறப்பித்தார். வரலாற்றின் கால ஓட்டத்தின் அரசரின் இந்த ஆணைகள் எவ்வளவு சரியானது என்பதை பலர் உணர்ந்து கொண்டனர்.

இந்த கோட்டையானது இருபுறம் 75 மீட்டரும், மூன்றாம் பகுதி 35 மீட்டரும் அளவுடைய முக்கோண வடிவில் கட்டப்பட்டுள்ளது. இதன் வடபகுதியில் உள்ள கதவின் மேல் அரசன் பிரான்சிஸின் முத்திரை பதிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றின் ஓட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளையும், சவால்களையும் இந்த ஆலயம் சந்தித்தது. பல்வேறு சண்டைகளுக்கும் காரணமாக இந்த ஆலயம் அமைந்தது. குறிப்பாக, இதை யார் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்ற பிரச்சினை எழுந்து கொண்டேயிருந்தது. கி.பி. 1790ல் குருக்களுக்கு எதிராக போராட்டம் நடத்திய குழுவினர், திருப்பலிக்கு செல்வது போல் ஆலயத்திற்குச் சென்று, ஆலயத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். கி.பி. 1792ஆம் ஆண்டு, ஜீன் 7ஆம் தேதி மூவொரு கடவுள் பெருவிழா அன்று வழக்கம் போல் அன்னையின் திருஉருவம் ஆலயத்திற்கு நகரத்திலிருந்து எடுத்து வரப்பட்டது. ஆனால், அன்னையின் தலையிலும் குழந்தை யேசுவின் தலையிலும் புரட்சியாளர்களின் கொடி கட்டப்பட்டிருந்தது. பிரெஞ்ச் புரட்சி எவ்வளவு







இருக்கவில்லை. எனவே அடிப்படையில் தந்தையைவிட தாய் பெரும்பங்கு வகிக்கிறாள். எனவே ஒருவனை தனது இரத்தத்தின் இரத்தம் என்றும் அவனில் இருப்பது தன்னுடைய தசை என்றும் அவனுடைய தாய் ஒருவரால் மட்டுமே கூறமுடியும்.

இன்று ஒவ்வொரு தாயும் தத்தமது குழந்தைகளுக்கு எத்தகைய அடையாளம் கொடுக்கின்றார்? எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கின்றபோது நல்ல குழந்தைதான். அது நல்லது ஆவதும் தீயது ஆவதும் அதன் அன்னை வளர்ப்பினிலே பாடல் வரி இது.

கதை: தனது தாய்க்கு வயது ஆனதும் கையில் இரண்டு ரொட்டித் துண்டுகளுடன் காட்டிற்கு கொண்டுவிடுவது அந்த கிராமத்தின் வழக்கம். அந்த வழக்கப்படி அந்த மனிதர் தனது தாயைக் கூடையில் வைத்துத் தனது தோளில் சுமந்து செல்கிறார். மாலை நேரம் ஆகிவிட இருளில் கண்கள் தங்களின் ஒளியை இழந்து கொண்டிருந்தன. அப்போது அத்தாய் தளர்ந்த குரலில் தனது மகனிடம், மகனே இருள் நெருங்கிவிட்டது. இது விலங்குகளின் ஆபத்து அதிகம் உள்ள பகுதி. எனவே இங்கேயே என்னை விட்டுவிட்டு நீ விரைவில் போ என்றாள். அம்மாவை இறக்கிவிட்டு போக நினைக்கையில் தனது தாயின் வெறும் கைகளைப் பார்த்துவிட்டு ரொட்டி எங்கம்மா என்று கேட்க தாய் நீ திரும்பிப் போகும்போது இருளில் பாதை தெரியாமல் போகலாம். எனவே அடையாளத்துக்காக வழிகளில் ஆங்காங்கே ரொட்டித் துண்டுகளை பிய்த்துப் போட்டிருக்கிறேன். அவைகளைப் பின்தொடர்ந்து பாதுகாப்பாக விரைவில் வீடுபோய் சேர் என்றார். இதைக் கேட்டதும் அம்மா என்று கூறி அழுது என்னை மன்னித்துவிடு என்று தனது தாயின் காலில் விழுந்து அழுதான். அம்மாவை வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அன்னையின் அன்பு அயலானையும் அரசனாக்கும்.

பெற்றோர்களே, குழந்தைகளுக்கு தாங்கள் செய்வது என்னவென்று புரிய வையுங்கள். தவறு செய்கின்றபோது கண்டிப்பது முக்கியமல்ல. மாறாக தவறு என்னவென்று புரிய வையுங்கள். இயேசுவின் வார்த்தையை நினைவு கூறுங்கள். தவறாகப் பேசியிருந்தால் தவறு என்னவென்று சுட்டிக்காட்டும். சரியாக பேசியிருந்தால் ஏன் என்னை அடிக்கிறீர்(யோவான் 18,23). மரியாவின் வளர்ப்பு இயேசுவை மனித நேயமுள்ளவனாக, பாசமுள்ளவனாக மனிதர்களின் மாணிக்கமாக மாற்றியது என்பது உங்கள் நினைவில் இருக்கட்டும்.

குறிப்பு: பின்வரும் விவலிய பகுதிகள் இக்கோட்பாட்டை மெய்ப்பிக்கின்றன.

தொநூ 3,15, எசா 7,14, மீக்கா 5,14. கலா 4,4-5, மாற்கு 3,31-35,6.3, லூக்கா 1,43,3.228.19-21

திப 1,14, யோவான் 1,4, 2.3-5,6.42, 19,25.27

ஒன்றுமில்லமையிலிருந்து படைத்தார். எனவே மரியா இறைவனின் தாய் அல்ல மாறாக படைப்புகளில் முதன்மையான கிறிஸ்துவின் தாய் என்று போதித்தார். அவரைத் தொடர்ந்து அவரது சீடர் நெஸ்தோரியுஸ் என்பவர் மரியாவின் வயிற்றில் உருவானது கடவுள் அல்ல மனிதனே என்று தவறாகப் போதித்தார்.

இச்சிக்கலான சூழ்நிலையில் 431 ஆம் ஆண்டு எபேசு நகரில் கூடிய திருச்சங்கம் திருத்தந்தை செலஸ்டின் அவர்களின் பிரதிநிதியாகிய புனித சிரில் (அலெக்சாண்டிரிய நகர் ஆயர்) தலைமையில் இப்பிரச்சனைக்கு தீர்வு கண்டது. அதாவது, இறைத்தன்மையும் மனிதத்தன்மையும் தண்ணீரும் பாலும் போன்று இயேசுவில் இரண்டறக் கலந்திருக்கின்றன என்றும் மரியா இரண்டு தன்மைகளையும் கொண்ட இயேசுவை பெற்றெடுத்தாள், எனவே மரியா இறைவனின் தாய் என்றும் அறுதியிட்டு கூறி அப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இந்த கருத்தியலுக்கு எதிர்ப்புக்கள் அவ்வப்போது எழுந்த வண்ணம் இருந்தன. 550 ஆம் ஆண்டுகளில் ஐந்தாவது கான்ஸ்டன்டைன் திருச்சங்கம் மேற்கண்ட தப்பறைக் கொள்கைகளை கடுமையாக கண்டித்தது. மேலும் மரியாவை இறைவனின் தாய் என்று ஏற்காதவர்களை திருச்சபையை விட்டுப் புறந்தள்ளியது.


பின்னர் வந்த திருத்தந்தையர்களில் 12 ஆம் பத்திநாதர் தனது உரைகளிலும் சுற்று மடல்களிலும் வெகுவாக அன்னை மரியா இறைவனின் தாய் என்று பயன்படுத்தியுள்ளார். இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் எட்டு முறை மரியா இறைவனின் தாய் என்ற சொற்கோவையை பயன்படுத்தியுள்ளது.

விவிலியமும் இதைப் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இயேசுவின் குழந்தை பருவ நிகழ்சிகளில் என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார். (லூக் 1,43). ஆண்டவர் என்ற வார்த்தையானது கிரேக்கர், யூதர்கள் மத்தியில் கடவுள் என்றே அர்த்தம் பெற்றுள்ளது. அவ்வாறே யோவானும் இயேசுவின் தாய் என்றே குறிப்பிடுகின்றார். மரியா கடவுளின் மகனான இயேசுவை ஈன்றெடுத்தார் என்பதை விவிலியம் நன்கு உரைக்கின்றது. மரியா இறைவனை சுமந்து பெற்றதால் இறைவனின் தாய் என்று அழைப்பது மிகவும் பொருத்தமாகும்.

இந்த தாயின் பண்புகளில் முக்கியமான ஒன்றாக இறைமகன் இயேசுவை உலகிற்கு அடையாளம் காட்டுகின்றார். கலா 4:4-5ல் பெண்ணிடம் பிறந்தவர் என்று வாசிக்கின்றோம். அதாவது உண்மையான மனிதன் என்று, ஒரு பெண்ணிடம் பிறப்பது கிறிஸ்துவின் மனித தன்மைக்கான ஆதாரம் என காட்டப்படுகிறது. அதாவது ஒருவன் மனிதனாக இருப்பதற்கு அவனது தாய்தான் மூலக்காரணம். மேலும் இறைமகன் மனிதனாகப் பிறக்க ஒரு பெண்ணின் ஒத்துழைப்பு போதுமானதாக இருந்தது. ஒரு ஆணின் குறுக்கீடு தேவையாய்







தூரம் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதற்கு சான்றாகும். கி.பி. 1793ஆம் ஆண்டு நவம்பர் 23-ம் நாள் ஆலயம் வழிபாட்டிற்கு மூடப்பட்டது.

கி.பி. 1795ஆம் ஆண்டு ஏப்ரல் 10-ம் நாள் ஆலயத்திலிருந்த பொருட்கள் ஏலத்தில் விடப்பட்டன. அன்னையின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த முன்னாள் கப்பல் மாலுமி ஜோசப் கார்மனேச் அன்னையின் திருஉருவத்தை வாங்கி பக்தியுடன் வழிபட்டு வந்தார். புரட்சி முடிந்தவுடன், ஆலயம் மீண்டும் திறக்கப்படவும், ஆலயத்தில் வழிபாடுகள் தொடரப்பட வேண்டும் என, ஜோசப் கி.பி. 1800 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் போர்களுக்கான மந்திரிக்கு கடிதம் எழுதினார். பல்வேறு காரணங்களால் தாமதப்படுத்தப்பட்டு, கி.பி. 1807ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் தேதி ஆலயத்தில் வழிபாடுகள் தொடங்கின. ஜோசப் கார்மனேச் ஏலத்தில் தான் வாங்கியிருந்த அன்னையின் திருஉருவத்தை ஆலயத்திற்கு வழங்கினார். அன்னையின் கரத்தில் இருந்த செங்கோலுக்கு பதிலாக மலர் கொத்து ஒன்று வைக்கப்பட்டது. அதிலிருந்து மலர்களின் அன்னை என்றும் அவர் அழைக்கப்பட்டார்.

ஆலயம் மீண்டும் திறக்கப்பட்ட நாளில், மக்கள் மார்சைல்ஸ் நகரின் பேராலயத்திலிருந்து அன்னையின் திருஉருவத்தை தாங்கியவர்களாய் பெரும் பவனியாக ஆலயம் அமைந்திருந்த குன்றை வந்தடைந்தனர். பாரம்பரிய திருப்பயண நாளாகிய ஆண்டவரின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழா பவனி, கார்பஸ் கிறிஸ்டி மீண்டும் கி.பி. 1814ஆம் ஆண்டு ஜீன் 12ஆம் தேதி கொண்டாடப்பட்டது. அன்று, மார்சைல்ஸ் பேராலயத்திலிருந்து வேண்டுதல்கள் வைத்திருந்த பாவ மன்னிப்பை வேண்டி நின்ற திருப்பயணிகள் வெறும் கால்களுடனும், முகத்தை மூடியவர்களாயும், அன்னையின் திருஉருவத்தையும், ஆண்டவரின் திருஉடலை குருவானவர் தாங்கி வர ஆலயம் நோக்கி வந்தனர். குன்றின் உச்சியை அடைந்தவுடன் பீரங்கி குண்டுகள் முழங்க ஆண்டவரும், ஆண்டவரின் திருத்தாயும் பக்தி வணக்கங்களுடன் வரவேற்கப்பட்டனர்.

கி.பி. 1845ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் நாள் ஆலயத்திற்கான புதிய மணிகள் செய்யப்பட்டன. அவை, அதே ஆண்டு அக்டோபர் 5ஆம் நாள், மார்சைல்ஸ் ஆயர் மேதகு. யூஜேனியோ தே மசேனோட் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.



கி.பி. 1850ஆம் ஆண்டு ஜீன் 22ஆம் தேதி அருட்பணி. ஜீன் அந்தோணியோ பெர்னார்ட் ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். அவர், இராணுவ அமைச்சகத்துடன் பலமுறை பேசி ஆலயம் விரிவுபடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினார். கி.பி. 1852ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி மேதகு யூஜின் ஆலய கட்டுமான பணிகளுக்காக நன்கொடைகள் தந்து உதவுமாறு பிரான்சு மக்களிடம் வேண்டுகோள் வைத்தார்.

ஆலயத்திற்கான திட்டப்பணிகள் தீட்டப்பட்டன. இறுதியாக, ரோமன் பைசாந்திய கட்டிட வடிவில் கட்ட முடிவெடுக்கப்பட்டது. கட்டிட பணிகளானது புரோட்டஸ்டன்ட் பிரிவைச் சார்ந்த கட்டிட கலைஞர் ஹென்றி ஜாக்குஸ் எஸ்பரித்தாந்து என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. தான் ஒரு பிரிவினை சபையை சார்ந்தவர் என்பதற்கான எந்த அடையாளமும் இல்லாமல் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை சிறப்பாக செய்து முடித்தார்.



கி.பி.1853ல் அருட்பணி. பெர்னார்டின் வேண்டுகோளுக்கிணங்க அச்சிற்றாலயத்தை விரிவுபடுத்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. அதே ஆண்டு செப்டம்பர் 11ம் நாள் ஆலயத்திற்கான அடிக்கல் மேதகு யூஜின் அவர்களால் நாட்டப்பட்டது. இப்பணிகள் நிறைவுற 40 ஆண்டுகள் ஆயின. பணிகள் நடந்து கொண்டிருக்கும் போதே, கி.பி. 1864ஆம் ஆண்டு ஜீன் மாதம் 5ஆம் நாள் இது அர்ச்சிக்கப்பட்டு, புனிதப்படுத்தப்பட்டது. இந்த ஆலயத்தின் அடித்தளமானது பாறைகளை குடைந்து உரோமைக் கட்டிடக்கலையின் நுணுக்கங்களோடு கட்டப்பட்டது. ஆலயத்தின் மேல்பகுதி பைசாந்திய கட்டிட கலை நுணுக்கங்களோடு அற்புதமான மொசைக் ஓவிங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. ஆலயத்தின் முகப்பில் 135 அடி உயரமுடைய சதுர வடிவிலான கோபுரமும் அதன் மேல் 41 அடி உயரமுள்ள மணிக்கோபுரமும் அமைந்துள்ளன. மணிக்கோபுரத்தின் மீது 37 அடி உயரமுள்ள, குழந்தையை கைகளில் தாங்கியுள்ள அன்னையின் திருஉருவம் அமைந்துள்ளது. இத்திருஉருவம் முழுவதும் செம்பு உலோகத்தால் செய்யப்பட்டுள்ளது. மணிக்கோபுரத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள இப்பெரிய அன்னையின் திருஉருவத்தை கோபுரத்தின் மேல் ஏற்ற வசதியாக படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன.



அன்னையின் திருஉருவமானது கால்வனோபிளாஸ்டிங் எனப்படும் மின்பிரிப்பூச்சுமானம் என்கிற நவீன முறையைக் கொண்டு செய்யப்பட்டது. இதன்படி, திருஉருவத்தை செய்ய நெருப்பு பயன்படுத்தப்படவில்லை, மேலும் இம்முறையின் காரணமாக உலோகத்தில் இருந்த தேவையில்லாத கழிவுகள் முற்றிலும் நீக்கப்பட்டன. அன்னையின் திருஉருவம் நான்கு பகுதிகளாக செய்யப்பட்டன. திருஉருவத்தை கோபுரத்தின் மேல் வைக்க, முதலில் ஒரு நடுக்கம்பியானது படிக்கட்டுகளுடன் அமைக்கப்பட்டது. பின், திருஉருவத்தின் நான்கு







# மாதா மன்றாட்டு மாலை

3



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## 3.இறைவனின் மாதாவே


கடவுளை அப்பா என்றும் அம்மா என்றும் அழைக்க கடவுள் நமக்கு உரிமை கொடுத்திருக்கிறார். ஆனால் கடவுளை மகன் என்று மனிதர் எவராலும் அழைக்க முடியுமா? முடியும். அதுவும் மரியாவால்தான் முடியும். அதுவும் "இது என் உடல் என் இரத்தம்" என்று குருக்கள் கூறுகின்ற வசீகர வார்த்தையை முழு உரிமையோடு கூற அன்னை மரியா ஒருவருக்கு உரிமை உண்டு. ஏனெனில் மரியா தன் இரத்தத்திலிருந்தும் உடலிலிருந்தும் தூய ஆவியின் துணையோடு இறைமகனைப் பெற்றெடுத்த தாய் என்பதால்தான் என்று புனித அகுஸ்தினார் கூறுகின்றார்.

மரியா இறைவனின் தாய் என்ற கருத்தியல் எகிப்திய மக்களின் சமயப் பற்றிலிருந்து உருவாக்கம் பெறுகிறது. எகிப்தியர்களின் மரபுப் படி இசுஸ்(ISIS) சூரிய கடவுளின் தாய் ஆகும். எகிப்தியர்களும் தங்களின் தேவைகளை இந்த பெண் தெய்வத்திடம் முறையிட்டுப் பெற்றுக் கொண்டனர். ஏனெனில் இந்தப் பெண் கடவுள் ஒரு தாய் போன்று கருணை மற்றும் கனிந்த உள்ளம் கொண்டவள் என்று அவர்கள் கருதினார்கள். இந்த கருத்தியல் கிறிஸ்தவர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று சொல்லலாம். அதாவது எகிப்து நாட்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கி.பி. 3 ஆம் நூற்றாண்டிற்கு முன்பே மரியா இறைவனின் தாய் என ஏற்று வாழ்ந்து வந்தனர். திருச்சபைத் தந்தையர்களில் ஒருவரான ஆரிஜன்(Origen) முதன் முதலில் இந்த சொற்கோவையை மரியாவுக்கு சூட்டினார். கிறிஸ்தவம் தோன்றியது முதல் கி.பி. 313 ஆம் ஆண்டு வரை பல எதிர்ப்புக்களையும் வேத கலாபனைகளையும் அது சந்தித்து வந்தது. பேரரசர் கான்ஸ்டன்டைன்(Constantine) கி.பி 313 ஆம் ஆண்டு மிலான் உடன்படிக்கை மூலம் கிறிஸ்தவ மக்களின் சுதந்திரத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தார். தன்னையும் ஒரு கிறிஸ்தவர் என்று அழைத்துக் கொண்டார்.

ஆனால் ஆரியுஸ் என்ற குரு தப்பறைக் கொள்கை ஒன்றைப் போதிக்கத் தொடங்கினார். அதாவது வார்த்தையான இறைமகன் ஆதியிலிருந்து இருப்பவர் அல்ல மாறாக இறைவன் அவரை



# முத்திப்பேறு பியேவெ நகரத்து ஜாகோமோ O S M



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

அன்தோனியோ டா வில்லா (Antonio da Villa) மற்றும் மோஸ்தியோலா (Mostiola) ஆகியோரின் மகனான ஜாகோமோ, 1270 ஆம் ஆண்டு பியவே என்கிற நகரில் பிறந்தார். சிறுவயதிலிருந்தே கிறிஸ்தவ நம்பிக்கையில் வேரூன்றி நமது மரியின் ஊழியர் வழிபாட்டு முறைகளில் விருப்பத்துடன் அடிக்கடி பங்கேற்கிறார். நமது மரியின் ஊழியர் குடும்பத்தின் மூன்றாம் சபையில் தன்னை இணைத்துக்கொண்டார். சிறப்பான முறையில் சட்டம் மற்றும் இலக்கியம் கற்றுத் தேர்ந்தார். அவருடைய இந்த கல்வித்திறமை, ஏழ்மையான மக்களுக்கு நேர்மையான முறையில் தொண்டு ஆற்ற தூண்டியது. ஒரு இளைஞனாக இருந்த காலத்தில் இருந்தே, அவர் ஏழைகள் மற்றும் நோயாளிகளைக் கவனித்து வந்தார். மேலும், ஒரு வழக்கறிஞராக, அனாதைகள், விதவைகள், ஏழைகள் மற்றும் துன்புறுத்தப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவர் பல முயற்சிகளை மேற்கொண்டார். அவரது நம்பிக்கைக்கு, உண்மை மற்றும் நீதி என்று அறிந்ததை எந்தத் தடைகள் வந்தாலும், பயமில்லாமல் செய்து முடித்தார். இயேசுவின் இரண்டு முக்கிய வசனங்களால் (லூக்கா 14: 26-27, மத்தேயு 19:21), ஈர்க்கப்பட்டு, தன்னுடைய வாழ்வை மற்றவர்களுக்காக பொது வாழ்க்கையில் ஈடுபடுத்திக்கொள்ள முடிவு செய்தார். அவர் தனது சொந்த செலவில் நகர வாயிலுக்கு வெளியே தேவாலயம் ஒன்றையும் மற்றும் ஒரு நல வாழ்வு மையத்தையும் மீட்டெடுத்தார். அந்த ஆலயத்திலும் மற்றும் இல்லத்திலும் மிகவும் பின்தங்கியவர்களை வரவேற்றார், அவர்களுக்கு அசாதாரண தொண்டு செய்தார்: அவர் அவர்களுக்கு உணவளித்தார், அவர்களின் காயங்களை குணப்படுத்தினார், எந்தவொரு வறுமையிலும், தன்னுடைய சேவைகளை இந்த மக்களுக்கு செய்ய மறுக்கவில்லை. பிச்சை எடுத்து இந்த மக்களை பாதுகாக்க துணிந்தார். இந்த ஏழை மக்களின் இருப்பிடத்தை, அங்கிருந்த ஆயர் பேராசையின் பெயரில் அபகரிக்க திட்டமிட்டார். ஆனால், நமது ஜாகோமோ ரோமை நகருக்கு, தெளிவான முறையில் சட்டங்களை விவரித்து கடிதம் எழுதி, ஆயரின் சதியை முறியடித்தார். இதன்பின், ஜாகோமோவிடம் சமாதானம் பேசுவதற்காக ஆயர் அழைப்பு விடுத்தார். அந்த சமாதான சந்திப்பிற்கு பின்னர் வீடு திரும்பியதும், ஆயரின் தூண்டுதலால், மர்ம நபர்களால் கொல்லப்பட்டார். இவ்வாறு 1304 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதி, ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் பாதுகாப்பிற்காக, தியாகியாக இறந்து இறைவனடி சேர்ந்தார். திருச்சபையால் 1806 ஆம் ஆண்டு முத்திப்பேறு பட்டம் ஜாகோமோவிற்கு அளிக்கப்பட்டது. திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர், இவருடைய நினைவை ஜனவரி 15 ஆம் நாள் கொண்டாட மரியின் ஊழியர் குடும்பத்திற்கு ஒப்புதல் அளித்தார்.








பகுதிகளும் வரிசைக்கிரமப்படி ஒன்றன்மீது ஒன்றாக ஏற்றப்பட்டு பொருத்தப்பட்டன. இப்படிகள், திருஉருவத்தில் பராமரிப்பு பணிகளைச் செய்வதற்கும், அன்னையின் திருஉருவத்தின் உச்சியிலிருந்து மார்சைல்ஸ் நகரின் எழிலைக் காணவும் உதவியாயிருக்கிறது. மிகுந்த கலை நுணுக்கங்களோடு அமைக்கப்பட்ட இத்திருஉருவம் கி.பி. 1869ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் செய்து முடிக்கப்பட்டது. கோபுரத்தின் மீது நிறுவும் பணிகள் கி.பி. 1870ஆம் ஆண்டு மே மாதம் தொடங்கி, செப்டம்பர் மாதம் 24ஆம் தேதி நிறைவுபெற்றன. இத்திருஉருவமானது 500 கிராம் தங்கத்தினால் முலாம் பூசப்பட்டுள்ளது.

ஆலயத்தில் உள்ள அரிய மொசைக் ஓவியங்கள், அங்கு எரிக்கப்பட்ட மெழுகுதிரிகளாலும், பிரெஞ்ச் புரட்சியின் போது ஆலயத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்களாலும் பாதிப்பு உள்ளாயின. இப்பாதிப்புகளை சரி செய்யும் நோக்குடன், கி.பி. 2001 முதல் 2008ஆம் ஆண்டு வரை ஆலயமானது மிகப்பெரிய பொருட்செலவில் புணரமைக்கப்பட்டது. இப்புணரமைப்பு பணிகளை, மார்சைல்ஸ் நகர கட்டிட கலைஞர் மைக்கேல் பத்தீரீசியோ, இத்தாலி நாட்டின் ப்ரியூலி மற்றும் வெனிஸ் நகர நிபுணர்களோடு இணைந்து செய்தார். இப்பணிக்களுக்கான மொசைக் மற்றும் கண்ணாடிகள், ஆலயம் கட்டப்படும் போது இப்பொருட்களை வழங்கிய வெனீஸ் நகர நிறுவனமே வழங்கியது. எனவே, அதன் பழமை மாறாமல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

பிரான்சு தேசத்தின் கடற்கரை நகரமான மார்சைல்ஸ் ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான மக்களை தன்னகத்தே ஈர்க்கிறது. இவர்களில் அநேகமாக எல்லாரும் தங்கள் விடுமுறை நாள் பயணத்திட்டத்தில் அன்னையின் திருத்தலத்தை தரிசிப்பதை ஒரு பகுதியாக கொண்டுள்ளனர். குன்றின் மீது இருந்து அனைவரையும் பாதுகாக்கும் நல் அன்னையாக இருக்கிற இவரின் கனிவு நிறைந்த பார்வையும், அவரின் அருகாமையிலிருந்து மார்சைல்ஸ் நகரின் எழிலை தரிசிப்பதும் கிடைத்தற்கரிய வாய்ப்பாகும். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக, அருட்பணியாளர். ஆல்பர்ட் மஊச அவர்களுடனும், இறைவனில் வாழும் அருள்பணியாளர். ஹியுக் லெப்ரேக் மஊச அவர்களின் இனிமையான உபசரிப்பில் இத்திருத்தலத்தை தரிசித்த இனிமையான நினைவுகள் உள்ளத்தில் இன்றும் இருக்கிறது. இனிய இயேசு பிறப்பு விழா மற்றும் புத்தாண்டு 2024 வாழ்த்துக்களும், செபங்களும்.



திருப்பயணம் தொடரும்..........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## லேவியர்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | | 4 |
| | 7 | | | | | | | | |
| | | 10 | | | | | | X | |
| | | | | | | 11 | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | 12 | | | | | | |
| | | 9 | | | | | 8 | | |
| | 6 | | | | | | | 5 | |
| 2 | | | | | | | | | 1 |

**வலமிருந்து இடம்**

1) அதன் உடைமையாளர் அந்த வீட்டை மீட்க விரும்பினால், மதிப்புப் பணத்துடன் ஐந்தில் ஒருபங்கை மிகுதியாகச் செலுத்த வேண்டும். அது மீண்டும் ……….. ஆகும்.

4) அது ………… அவன் மைந்தர்க்கும் உரியது. அதைத் தூயகத்திலேயே உண்ண வேண்டும். ஏனெனில் அது தூயதின் தூயது.

5) ஆண்டவர் திருமுன் ……….. பசும்பொன் குத்துவிளக்குத் தண்டின் மேலிருக்கிற கிளைவிளக்குகளை எப்போதும் எரியவிட வேண்டும்.

8) பாவம் போக்கும் பலியின் கொழுப்பை ………….. பலிபீடத்தில் எரித்து விடுவான்

11) அவர் அதை நன்றிக் கடனாகச் செலுத்தினால் எண்ணெயில் தோய்த்த நெய்யப்பங்கள், எண்ணெய் பூசிய புளிப்பற்ற ……….. மெல்லிய மாவினால் எண்ணெயில் நன்கு பிசைந்து செய்த நெய்யப்பங்கள் ஆகியவற்றை நன்றிப் பலியோடு கொண்டுவர வேண்டும்.

**இடமிருந்து வலம்**

2) அரணற்ற ………….. வீடுகளோ நாட்டின் வயல் வெளிக்கு ஒப்பானவை. மீட்டெடுக்கலாம்: அல்லது யூபிலி ஆண்டில் விற்றவனுக்கே திரும்பக் கிடைக்கும்.

3) ஒருவரது உடலில் நெருப்புப்பட்டதனால் ………… ஏற்பட்டு, நெருப்புப்பட்ட இடத்தில் சிவப்பு அல்லது வெண்மையான மறு தோன்றினால், அவரைக் குரு சோதித்துப் பார்க்க வேண்டும்

6) பசுவையும் அதன் கன்றையும் அல்லது ஆட்டையும் அதன் குட்டியையும் ஒரே நாளில் பலியிட …………

7) திராட்சைத் தோட்டத்தில் பின்னறுப்பு வேண்டாம்: சிந்திக் கிடக்கும் பழங்களைப் பொறுக்க வேண்டாம். அவற்றை எளியோருக்கும் ……… விட்டுவிட வேண்டும். நானே உங்கள் ஆண்டவராகிய கடவுள்!





அகற்ற இயலாதெனினும் அதன் தாக்கத்திலிருந்து காத்துக்கொள்ள இயலும். அதற்கு ஆண்டவரின் உடனிருப்பே கருவியாகிறது என்று சொல்லும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கலாச்சாரம் பழமை வாய்ந்த கொரிந்து நகரில் கிறிஸ்துவை அறிவித்தது, அங்கு திருஅவையை ஏற்படுத்தியதில் தூய பவுலுக்கு பெரும் பங்கு இருக்கிறது. நற்செய்தியை அறிவிப்பது தமது கடமை என்றும் அதன் நிமிர்த்தம் தமக்குகிடைப்பது மனநிறைவு என்கிறார் பவுல். நற்செய்தியின் நிமிர்த்தம் வாழ்வில் வந்த துன்பங்களை மன உறுதியுடன் ஏற்று கிறிஸ்துவுக்கு சாட்சிய வாழ்வு வாழ்ந்தார். அவரது விசுவாசத்தை நமக்கு உணர்த்துவதாக இன்றைய வாசகம் அமைந்துள்ளது.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் புனித பவுலைப் போல் மன உறதியுடன் நற்செய்தியை அறிவித்து அவ்விறை பணியில் நிறைவு காண அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் வருகின்ற துன்பங்களுக்கு காரணம் என்ன என்று தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடாமல் அவற்றை துணிவுடன் ஏற்று உமது உடனிருப்பை உணர்ந்து வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, உடல் நோய்களாலும், தோல்விகளாலும், இழப்புக்களாலும் நம்பிக்கை இழந்து வாழ்கின்ற ஒவ்வொருவரையும் உமது வார்த்தையாலும் உமது உயிருள்ள பிரசன்னத்தாலும் அவர்களை ஆற்றுப்படுத்தி அவர்களுக்கு நம்பிக்கையின் ஊற்றாக நீர் இருந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எல்லா சூழ்நிலையிலும் உமது தெய்வீக பிரசன்னத்தை உணர்ந்து புனித பவுலை போல உமது பாடுகளில் குறைவாய் இருப்பதை எனது உடலில் நிறைவு செய்வேன் என்ற மன உறுதியோடு வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

சகோதரிகளாக ஏற்றுக்கொண்டு ஒற்றுமையோடும், சமாதானத்தோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எங்களிடையே இருக்கின்ற வேற்றுமைகள் மறைந்து, ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு முடிந்த உதவிகளை ஒருவருக்கு ஒருவர் செய்து உமது அன்பின் அரசை இவ்வுலகத்தில் கட்டி எழுப்பிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 5-ம் ஞாயிறு (04.02.2024)

யோபு 7:1-4,6-7 1கொரி 9:16-19,22-23 மாற் 1:29-39

### முன்னுரை

துன்பங்கள், பிரச்சனைகள் வராமல் என்னைக் காப்பாற்று என்று மட்டும் செபிக்காதீர்கள். அவைகளை சந்திக்க மனஉறுதி, நம்பிக்கை, வெற்றி பெற இறை ஞானம் இவை மூன்றையும் அடையாளம் காட்டும்படி வேண்டுங்கள். இன்றைய திருவழிபாட்டின் மையக்கருத்து துன்பம் தொடர்கதையாக மனிதனைத் தொடர்ந்தாலும், நம்பிக்கை இழக்காது, இறைவனின் உடனிருப்பில் நிலைத்திருந்து செபிப்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள் என்பதே.

துன்பம் என்பது முழுமைக்கும் குறைபாட்டுக்கும், உண்மைக்கும் தீமைக்கும், வாழ்வுக்கும் சாவுக்கும், இருளுக்கும் ஒளிக்கும், மெய்மைக்கும் பொய்மைக்கும் இடையே ஏற்படும் போராட்டமே. இந்த போராட்ட வாழ்வில் நம்பிக்கை இழக்காத மனிதன் ஆண்டவரின் உடனிருப்பால் இறையாற்றலைப் பெறுகிறான். துன்பத்தின் பாதிப்புகளிலிருந்து விடுதலையடைகிறான். துன்பங்களை நாம் பொறுமையுடன் ஏற்பதன் வழியாக இந்த துன்பங்களே நமக்கு பலவிதமான வரங்களைப் பெற்றுத்தரும் வழியாக மாறலாம். இறைவனது உடனிருப்பாலும், ஆறுதல் மொழிகளாலும், நம்பிக்கையும், தெளிந்த சிந்தனையும், நேரிய பார்வையும், தீமையை எதிர்க்கும் மன உறுதியும் பெறுவோம் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

யோபு நோயுற்று அனைத்தையும் இழந்தார். மனித வாழ்வு பொருளற்றது, பயனற்றது, நோயும் துன்பமும் கொண்ட வாழ்வு தேவைதானா? என்று விரக்தியின் உச்ச நிலைக்குத் தள்ளப்பட்டார். இருப்பினும் துன்ப நேரத்தில் ஆண்டவரைப் பற்றிக் கொண்டார். துன்பத்தின் ஓர விளிம்புக்கு தள்ளப்பட்டு ஆண்டவரிடம் முறையிட்டாலும்கூட ஆண்டவரின் உடனிருப்பிலிருந்து யோபு பின்வாங்கவில்லை துன்பம் நிழலைப் போலத் தொடரும்போது அதை





9) அதன் குடலையும் கால்களையும் தண்ணீரில் கழுவி அவை எல்லாவற்றையும் குருக்கள் பலிபீடத்தின்மேல் எரித்துவிடுவர். நெருப்பாலான இது ஆண்டவர் விரும்பும் நறுமணமிக்க நெருப்புப்பலி ..........

10) அதன் குடலும் பின்னந்தொடைகளும் தண்ணீரால் கழுவப்படும். அவை ......... பலிபீடத்தின்மேல் குரு எரியூட்டுவார். இது ஆண்டவர் விரும்பும் நறுமணமிக்க நெருப்பாலான எரிபலி ஆகும்.

12) இவ்வாறு, குரு இத்தகைய பாவங்களில் ஒன்றைச் செய்தவருக்காகப் பாவக் கழுவாய் நிறைவேற்றுவாராக. .......... அவர் மன்னிப்புப்பெறுவார்.

**மேலிருந்து கீழ்**

3) இஸ்ரயேல் மக்கள், தங்கள் நடுவே இருக்கும் எனது தங்குமிடத்தைத் ........., சாகாதபடிக்கு, நீங்கள் அவர்கள் தீட்டுகளிலிருந்து அவர்களை விலக்கி வைக்க வேண்டும்.

4) மோசே ஆரோன், அவருடைய எஞ்சிய புதல்வர்களாகிய எலயாசர், இத்தாமர் .......... கூறியது: நீங்கள் ஆண்டவரின் நெருப்புப் பலிகளில் எஞ்சிய உணவுப் படையலை எடுத்துப் பலிபீடத்தருகில் புளிப்பற்றதாய் உண்ணவேண்டும். அது மிகவும் தூயது.

7) நான் ........... அவன் குடும்பத்தையும் எதிர்த்து என் முகத்தைத் திருப்பிக் கொள்வேன். மோலேக்கின் ஒழுக்கக்கேட்டில் ஈடுபட்ட அவனையும் அவனைப் பின்பற்றிய யாவரையும் அவர்கள் இனத்தில் இராதபடி அழிப்பேன்.

10) சந்திப்புக் கூடார நுழைவாயிலில், ஆண்டவர் திருமுன் அதைக்கொண்டு வந்து, ...........

தலைமேல் தன் கையை வைத்து ஆண்டவர் திருமுன் அதைக் கொல்வார்

11) ............ நேர்ச்சை எரிபலி எனில், மாட்டு மந்தையிலிருந்து எடுக்கப்பட்ட, பழுதற்ற ஒரு காளையை அவர் படைக்கவேண்டும். ஆண்டவர் திருமுன் ஏற்புடையதாகுமாறு, அதைச் சந்திப்புக் கூடார நுழைவாயிலில் அவர் படைக்கட்டும்.

**கீழ்ருந்து மேல்**

1) உங்களுக்குள் காட்டு விலங்குகளை வரவிடுவேன். அவை உங்கள் பிள்ளைகளை

............ உங்கள் ஆடுமாடுகளை அழித்து, உங்களைக் குறைந்துபோகச் செய்யும்.

2) ஆறு ஆண்டுகள் வயலைப் பயிரிட்டுத் திராட்சைக் கொடிகளைக் .......... அவற்றின் பலனைச் சேர்ப்பாய்.

5) ஆறு நாள்கள் நீங்கள் வேலை செய்யலாம். ஏழாம் நாளோ முழுமையாக ஓய்வெடுக்கும் நாள்: புனித சபை கூடும் நாள். அன்று நீங்கள் ஒரு வேலையும் செய்யவேண்டாம். நீங்கள் வாழும் ............ அது ஆண்டவருக்கான ஓய்வுநாள்.

6) தலையில் திருப்பொழிவு எண்ணெய் வார்க்கப்பட்டு குருத்துவ உடை அணிந்துள்ள தலைமைக் குருவாகிய உன் சகோதரன், தன் தலையை மூடிக் கொள்ள .......... தன் உடைகளைக் கிழித்தலாகாது.

8) நேர்ச்சையான எந்த உணவுப்படையலும் உப்பிடப்பட வேண்டும். உன் உணவுப் படையலில் கடவுளின் உடன்படிக்கையாகிய உப்பைக் குறையவிடாமல் உன் நேர்ச்சைகள் .......... உப்பையும் படைப்பாயாக.

9) நேர்ச்சையின் தலைமேல் அவர் தம் கையை வைத்துச் சந்திப்புக்கூடாரத்தின் நுழைவாயிலில் அதனைக் கொல்லவேண்டும். அப்போது ........... புதல்வராகிய குருக்கள் அதன் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிப்பர்.

12) ஆண்டவரின் கட்டளைகளின்படி, செய்யக்கூடாதென்று விலக்கப்பட்ட ஒன்றை ஒருவர் செய்து பாவத்திற்கு உள்ளானால், ........... அறியாமல் செய்தாலும்கூட, அவர் குற்றவாளியே.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-01-2024

# புத்தாண்டிற்கு விண்ணப்பம் 9

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



புத்தாண்டே! புத்தாண்டே!
இப்படி நீ வருவாயா
இயற்கை பேரிடர் பதிவுகள் இன்றி
செயற்கை போர்களும் நிகழ்வுகள் இன்றி
கொடிய கொள்ளை நோய்களும் இன்றி
நீடிய பூமியின் மாசுகள் இன்றி
மலிவு அரசியல் பாசிசம் இன்றி
மத பயங்கர மாச்சரியம் இன்றி
சாதி நரம்பின் சாகசம் இன்றி
நீதி வரம்பில் சார்பகம் இன்றி
பஞ்சம் பட்டினி கொஞ்சமும் இன்றி
வஞ்சம் வக்கிரம் தஞ்சமும் இன்றி
லஞ்சம் லாவண்யம் நஞ்சுமே இன்றி
விஞ்சும் வன்முறை சம்பவம்கூட இன்றி
விபத்து நேரிடும் சாலைகள் இன்றி
ஆபத்து மேலிடும் தொழிற்சாலைகள் இன்றி
சுகத்தை தேடிடும் சோம்பேறிகள் இன்றி
அகத்தை வாட்டிடும் அவலங்கள் இன்றி
முதியோர் இல்லங்கள் முற்றிலும் இன்றி
மாமியார் மருமகள் சண்டைகள் இன்றி
சீரியல் வாடையே சாத்தியம் இன்றி
செல்போன் சீண்டல்கள் சங்கதி இன்றி
இளைஞர்களைவ வாட்டும் போதைகள் இன்றி
கலைஞர்களை தீட்டும் வறுமைகள் இன்றி
தீயவை ஊட்டிடும் ஊடகங்கள் இன்றி
மாயையை போற்றிடும் மாணவர்கள் இன்றி
புத்தாண்டே! புத்தாண்டே
இப்படிதான் நீ வரவேண்டும்





இயேசுவின் அதிகாரத்திற்கும் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. இயேசுவின் அதிகாரம் பதவியிலிருந்தோ, பரம்பரையிலிருந்தோ, படிப்பிலிருந்தோ வந்ததில்லை. மாறாக, தந்தையாகிய இறைவனோடு தான் கொண்டிருந்த உறவின் வழியாக வந்தது என்பதை தெளிவாகவே சுட்டிக்காட்டுகிறார். இயேசுவின் அதிகாரம் ஆட்டிப் படைப்பதல்ல அன்பு செய்வதே, வாட்டி வதைப்பதல்ல வாஞ்சையோடிருப்பதே, போட்டி போடுவதில்லை பரிவோடிருப்பதே, திட்டித் தீர்ப்பதல்ல தியாகம் செய்வதே. அத்தகைய அதிகாரத்தை நாமும் கொண்டு வாழ்ந்திட அருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் ஜெத்ரோ மோசேவிடம் இறைவன் மோசேவுக்கு கொடுத்த அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கச் சொல்கிறார். அதிகாரம் பிறரை அடக்குவதற்காக அல்ல, பிறருக்கு பணி செய்ய என்பதனை வலியுறுத்துகின்றது. இறைவனது திருவுளத்தையும், பிறரின் நலனையும் மையப்படுத்தியதாக அதிகாரம் அமைய வேண்டும் என்று வலியுறுத்தும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இறைவன் மீது பற்றுகுறைந்து உலக இன்பங்களின் மீது பற்று கொண்டு வாழ்ந்த கொரிந்து நகர மக்களுக்கு தூய பவுல் அறிவுரையாக எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியை இவ்வாசகம் விளக்குகிறது. திருமண உறவு இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்டது என்றாலும், இந்த திருமண உறவு பிறர் உறவையும், இறை உறவையும் அடிப்படையாகக் கொண்டே இருக்க வேண்டும் என்று வலியுறுத்தும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறையன்பையும், பிறரன்பையும் கிறிஸ்தவ வாழ்வின் மையம் என்று உணர்ந்து தன்னலம் துறந்து இறைவனுக்கும் பிறருக்கும் பணிபுரிந்து வாழ தேவையான அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, எங்கள் நாட்டு அரசியல், சமய, சமூக தலைவர்கள், அதிகாரம் மக்களை ஆட்டிப்படைக்க அல்ல மாறாக மக்களை அன்பு செய்து அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தவே தரப்பட்டுள்ளது என்று உணர்ந்து வாழக்கூடிய இறைஞானத்தை அவர்களுக்குத் தர அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் நான், எனது, எமது என்ற குறுகிய வட்டத்திற்குள் வாழாமல் எல்லோரையும் சகோதர

கூறும் அறிவுரைகள், ஊனியல்பு இச்சைகளை விட்டுவிட்டு ஆவிக்குரிய செயல்களை செயல்படுத்திட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்களது அழைப்பின் மேன்மையை உணர்ந்து விவிலியம் சுட்டிக்காட்டும் மனமாற்ற செய்தியை பிறருக்கு அறிவித்து அவர்களது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, மனமாற்றம் என்பது முன்னிருந்த நிலையிலிருந்து மாறுபட்ட நிலையை பற்றிக் கொள்வதே என்பதை உணர்ந்து பழைய பாவ வாழ்வை விட்டுவிட்டு ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, எங்களது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் உமது வார்த்தையை வாசித்து, அவ்வார்த்தையை வாழ்வாக்கி உமது இரக்கத்தையும் மீட்பையும் பெற்று மனமாற்றம் பெற்ற மக்களாக வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, மகிழ்ச்சி, சமாதானம், ஒற்றுமை இழந்து இருக்கின்ற குடும்பங்கள் உமது அருளால் ஆட்கொள்ளப்பட்டு அக்குடும்பங்களில் உமது தெய்வீக பிரசன்னத்தின் சமாதானம், மகிழ்ச்சி பெற்று வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 4-ம் ஞாயிறு (28.01.2024)

இச 18:15-20 1கொரி 7:32-35 மாற் 1:21-28

**முன்னுரை**

அதிகாரத்தை விரும்பாதவர் யாருமில்லை. திருச்சபையில், நாட்டில், ஊரில், குடும்பத்தில் நடக்கும் பல்வேறு சண்டைகளுக்கும், போட்டி பொறாமைகளுக்கும் காரணம் அதிகாரப் போட்டியே. யார் அதிகாரம் செலுத்துகிறார்களோ அவர்கள்தான் பெரியவர்கள் என்ற சிந்தனை மனிதர்களாகிய நம் அனைவரையும் ஆட்டிப்படைப்பதன் காரணமாக, அந்த அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு பெரிய போட்டியே நடைபெறுகிறது. மற்றவர்களின் காலை வாரிவிடும் அலங்கோலங்களும் அரங்கேறுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் அதிகாரத்தைப் பற்றிய சரியான புரிதலை நாம் பெற்றுக் கொள்ள இன்றைய வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. மனிதர்களாகிய நமது அதிகாரத்திற்கும்





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



## பொதுக்காலம் 2-ம் ஞாயிறு (14.01.2024)

1 சாமு 3:3-10,19 1கொரி 6:13-15,17,20 யோவா 1:35-42

**முன்னுரை**

கிறிஸ்துவை நம் அனுதின வாழ்வில் அனுபவப்பூர்வமாக உணர்ந்து, அவரது போதனைகளுக்கு சாட்சிகளாக வாழ இறைவன் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். இன்றைய வாசகங்கள் கடவுளை உலகிற்கு அறிமுகப்படுத்தும் மாபெரும் பொறுப்பு ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் உண்டு என்ற செய்தியைத் தெரிவிக்கின்றன.

கிறிஸ்துவை நாம் உலகிற்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்றால் அவரை நாம் முதலில் அறிந்திருக்க வேண்டும். நாம் அறியாத ஒன்றை அனுபவிக்காத ஒன்றை நிச்சயமாக உலகிற்கு அறிமுகப்படுத்த இயலாது. அதே நேரத்தில் இதற்கு மாறாக கிறிஸ்துவை அறிந்தவர்கள், அனுபவித்தவர்கள் அதை உலகிற்கு அறிவிக்காமல் இருக்க முடியாது. நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது என்று திருத்தூதர்கள் கூறியது நினைவுகூரத்தக்கது. எனவே கிறிஸ்துவை ஒவ்வொரு நாளும் இறைவார்த்தையிலும், நற்கருணையிலும் கண்டு அவரை உணர்வுப் பூர்வமாக அனுபவித்து, அவ்விறை அனுபவத்தை பிறரோடு, குறிப்பாக கிறிஸ்துவை அறியாதவர்களோடு பகிர்ந்து கொண்டு வாழ அருள் வேண்டுவோம் இத்திருப்பலியில். நாம் பெறுகின்ற இறை அனுபவத்தை நமது சொல்லாலும், செயல்களாலும் பிறரோடு பகிர்ந்து வாழ்வோம். அனுபவம் மூலம் ஆண்டவனை அறிந்து ஆனந்தக் கடலில் திளைத்திடுவோம். அறிந்த கிறிஸ்துவை அறிமுகப்படுத்தி அன்பைப் பரப்பும் அடியவராவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் கடவுளை அறியாதவனாயிருந்த சிறுவன் சாமுவேலுக்கு கடவுளை ஏலி அறிமுகப்படுத்துவதைப் பற்றி வாசிக்கிறோம். அவர் மீண்டும் உன்னை அழைத்தால் ஆண்டவரே பேசும் உம் அடியேன் கேட்கிறேன் என்று பதில் சொல் என்று கூறி ஆண்டவரை முதன்முதலாக சாமுவேலுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

ஏலியைப் போல் ஒவ்வொரு நாளும் திருப்பலியில் நாம் கண்டு உணரும் கிறிஸ்துவை பிறருக்கு அறிமுகப்படுத்திட தேவையான அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இன்றைய நவீன நகரத்திற்கு உரிய அத்தனை வாழ்வின் வசதிகளும், பொருளாதாரச் செழிப்பும் கொரிந்து நகரத்தில் இருந்தன. மக்கள் பல கடவுள்களை வழிபட்டு மனம் போனபடி வாழ்க்கை நடத்தி வந்தனர். இந்நிலையில் புதிதாக கிறிஸ்தவ மறையைத் தழுவிய சகோதர சகோதரிகள் தங்களின் வாழ்வையும் கொரிந்து நகர மக்களின் வாழ்க்கையையும் பார்த்து குழப்பம் அடைகின்றனர். எனவே தூய பவுல் கொரிந்து நகரத்தில் இருக்கும் கிறிஸ்துவே மக்களுக்கு ஒழுக்கத்துடன் வாழவும், கிறிஸ்துவின் போதனைகளுக்கு சான்று பகிரவும் கிறிஸ்தவ வாழ்வை பின்பற்றவும் வலியுறுத்திய அக்கடிதத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தாங்கள் பெற்ற இறை அழைத்தலின் மேன்மையை உணர்ந்து பெற்றுக்கொண்ட அழைத்தலுக்கு ஏற்ப வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் உமது உயிருள்ள தெய்வீக பிரசன்னத்தை இறைவார்த்தையிலும், நற்கருணையிலும் கண்டு அனுபவித்து, உம்மில் ஆழ்ந்த விசுவாசம் கொண்டு வாழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் இவ்வுலக ஆடம்பர வாழ்விற்கும், உலக இன்பங்களுக்கும் அடிமைகளாக மாறாமல் ஒழுக்கமுடனும், ஆன்மீகத்தோடும் வாழ்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, உமது அழைப்பை ஏற்று மறைபரப்பு பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் உடல் சுகத்தையும், மன வலிமையையும், உடல் திடத்தையும், பாதுகாப்பையும் கொடுத்து தங்களது இறைபணியில் முழுமை கண்டிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 3-ம் ஞாயிறு (21.01.2024)

யோனா 3:1-5,10 1கொரி 7:23-31 மாற் 1:14-20

**முன்னுரை**

எரியும் புதரில் மோயிசனை, மெல்லியக் காற்றில் எலியாவை, இடியின் ஒலியில் பவுலை இறைவன் அழைத்தார். இவர்கள்





இறைப்பணியை நிறைவு செய்ய அழைக்கப்பட்டவர்கள். திருமுழுக்கு யோவான் சிறைபட்டபின் காலம் நிறைவேறிவிட்டது மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள் என்ற போதனையுடன் இயேசு வெளிப்படையாகத் தன்னுடைய பணிவாழ்வைத் தொடங்கினார். இன்றைய நற்செய்தியில் இயேசு மீன் பிடித்துக் கொண்டிருந்த சாதாரண மனிதர்களை அழைத்தார். அவர்களும் உடனே தங்கள் படகையும், வலைகளையும் விட்டுவிட்டு முன்பின் தெரியாத இயேசுவைப் பின் தொடர்ந்தனர். இது எதையும் எதிர்பார்க்காத அவர்களின் உள் மனத்தினையே வெளிப்படுத்துகிறது.

விவிலியம் சுட்டிக்காட்டும் மனமாற்றம் ஆழமான அடிப்படையான மாற்றம். இது உள் மாற்றம், இதய மாற்றம். மனமாற்றம் என்பது முன்னிருந்த நிலையிலிருந்து மாறுபட்ட நிலையை பற்றிக் கொள்வதே, கடலையும், மீன்களையும் நம்பி வாழ்ந்த மீனவர்களை இயேசு அழைத்தபோது துணிவுடன் முன்வந்தனர். எதற்காக அழைக்கிறார் என்றோ, அவரைப் பின்தொடர்ந்தால் என்ன கிடைக்கும், எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைப்பற்றியெல்லாம் சிந்திக்காமல் முழுவதும் இயேசுவிடம் ஒப்படைத்து அவரைப் பின்தொடர்ந்தனர். இனி அவர்களின் வாழ்வின் மையம் கடல் அல்ல, கடவுளே என்ற முடிவுக்கு வந்தனர். இறைவன் ஒருவரே நிலையானவர். நிலையான இறைவனின் இறையாட்சியை உருவாக்க அதற்கு உருக்கொடுக்க மனமாற்றம் அடைந்து நற்செய்தியை நம்புவதே சிறந்த வழியாகும் என்ற உண்மையை உணர்ந்து வாழ இறையருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

வழி தவறி வாழ்ந்த நினிவே நகர மக்களை யோனா எச்சரித்தபோது உடனே செவிமடுத்து மனம் வருந்தி புதிய வாழ்க்கையைத் தொடங்கினர், கடவுள் அவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்கிறார். அவர்களும் அழிவிலிருந்து தப்பித்து விழிப்புணர்வு பெற்றார்கள். மனிதன் மனமாற முடியும் மனமாற வேண்டும். மனம்மாறி வாழும் மனிதன் உலக செல்வங்கள், உலக உறவுகள் மட்டில் கவனமாக செயல்பட இன்றைய முதல் வாசகம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இவ்வாசகம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை தூய பவுல் மூலம் நமக்கு விளக்குகிறது. ஆண்டவரின் வருகையின்போது நாம் இம்மண்ணுலகில் எப்படிப்பட்ட வாழ்வைக் கடைபிடித்து வாழ வேண்டும்? எதன் அடிப்படையில் நம்முடைய வாழ்வினை வழிநடத்த வேண்டும் என்பதற்கு தூய பவுல் அடியார்